දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832
Fax : 2784825

ලේකම්
செயலாளர்
Secretary } 2784812

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50
Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

ඉසුරුපාය, ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
இசுருபாய, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை,
பத்தரமுல்ல.
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte.
Battaramulla.

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

මගේ අංකය
எமது இல.
MyNo. } ED/03/20/02/01/02/New

දිනය
திகதி
Date } 2016/12/16

**சுற்றறிக்கை இலக்கம் - 28 /2016**

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்
பாடசாலைகளின் அதிபர்கள்

**பயிற்றப்படாத ஆசிரியர்களுக்காக ஆசிரியர் கல்லூரியினால் இரண்டு வருடகால ஆசிரியர் பயிற்சியினை வழங்குதல்.**

முழுமையான கல்விச் செயற்பாட்டின் அத்தியாவசிய வளமான ஆசிரியர்களின் வெற்றியின் பிரதான காரணி ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சியாகும். தேசத்தின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஆசிரியருக்கு விசேட பொறுப்புக்கள் வழங்கப் பட்டுள்ளன. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைப் பலப்படுத்தல் மூலம் சிறந்த சிந்தனைகள் கொண்ட அறிவு ஞானம்மிக்க எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்கும் ஆசிரியரின் அறிவு மற்றும் பண்புசார் தரம் விருத்தி செய்யப்பட வேண்டும். இதற்காகத் தேவையான வசதிகளை வகுத்து அறிவு, திறமை மற்றும் அனுவபம்மிக்க ஆசிரியர்களை உருவாக்குவது ஆசிரியர் கல்லூரிகளினால் அமுல்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சியின் பிரதான இலக்காகும்.

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய பாடசாலை முறைமையில் சகல பயிற்றப்படாத ஆசிரியர்களையும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியதுடன் இதற்காகப் பொருத்தமான முறைகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள பண்புசார் தரம்மிக்க பயிற்சியான இரு வருடகாலப் பாடநெறியினை மேற்கொள்ளும் செயற்பாடுகள் ஆசிரியர் கல்லூரிகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டளவில் சகல பயிற்றப்படாத ஆசிரியர்களையும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக மாற்றிமைக்கும் யோசனைக்கமைய கல்வி முறைமையில் உள்ள சகல பயிற்றப்படாத ஆசிரியர் பாடநெறிக்காகவும் சேர்த்துக் கொள்ளக்கூடியவாறு கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் அமுல்படுத்தப்படவுள்ளன.

tamilguru.lk

2. பயிற்சிக்காகத் தகைமைபெறும் ஆசிரியர்கள்

2.1. அரச சேவை ஆணைக்குழு சபையின் செயலாளர் அல்லது கல்வி சேவைக் குழுவின் செயலாளர் அல்லது மாகாண அரச சேவை ஆணைக்குழச் செயலாளரின் ஒப்பத்துடன் முறையான நியமனக் கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள அரச பாடசாலைகளில் சேவையாற்றும் நிரந்தர பயிற்றப்படாத ஆசிரியர்கள்.

2.2. கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தனியார் பாடசாலைப் பெயர்ப் பட்டியலில் உள்ளடங்கும் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டு நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்கள்.

2.3. கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள பிரிவெனாக்களில் கற்பிக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள நியமனத்தைக் கொண்ட பயிற்றப்படாத பிரிவெனா ஆசிரியர்கள்.

2.4. மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தினால் அமுல்படுத்தப்படும் தொலைக்கல்வி, பிரின்சட், ஆசிரியர் கல்லூரியின் பழைய பாடத்திட்டம், பட்டம் அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியினைத் தொடர்ந்து சித்தியடையவில்லை என்பது உரிய ஆசிரியர் பயிற்சிப் பொறுப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள்

03. பாடநெறியின் தன்மைகள்

3.1. இப்பாடநெறி இரண்டு வருடகால விதிவிடப் பயிற்சி கொண்டது என்பதுடன் தங்குமிட வசதிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் அதிபரின் எழுத்து மூல அங்கீகாரத்திற்கமைய ஆசிரியர் கல்லூரிகளுக்கு அண்மையில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.

3.2. பாடநெறியினை நடாத்துவதற்காகக் காணப்படும் வசதிகளுக்கமைய பாடநெறி நடைபெறும் ஆசிரியர்கள் தீர்மானிக்கப்படுவதினால் சகல சந்தர்ப்பங்களிலும் வசிக்கும் இடத்தில் அண்மையிலுள்ள ஆசிரியர் கல்லூரியினை வழங்க முடியாது என்பதுடன் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் எக்காரணம் கொண்டும் ஆசிரியர் கல்லூரியினை மாற்றியமைக்க முடியாது.

3.3. ஆசிரியர் கல்லூரியின் பயிற்சிக் கால எல்லைக்குள் ஏனைய பாடநெறிகளைத் தொடர அல்லது வேறு வெளிப்பரீட்சைகளுக்குத் தேற்றக்கூடாது. இது தொடர்பில் கிடைக்கும் தகவல்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் பாடநெறியைக் கைவிடுவது தொடர்பில் முறையாக விசாரணைகள் நடாத்தப்பட்டதன் பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.4. ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிக்காக ஆசிரியர் கல்லூரிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் எந்தவொரு பயிற்சியாளருக்கும் தமது விருப்பத்திற்கமைய பாடநெறியிலிருந்து விலக முடியாது. அவ்வாறு விலகும் பட்சத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் நிதி மதிப்பீடுகளை மேற்கொண்டு மிகை கட்டணங்களுடன் அறவிடப்படும்.

3.5. சகல விண்ணப்பதாரர்களினாலும் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் ஆசிரியர் பயிற்சிக்காகப் பதிவு செய்வதற்கு அழைக்கும் தினத்தில் கையளிக்க வேண்டும்.

(அ) பூரணப்படுத்தப்பட்ட பிணைமுறி

(ஆ) ஆசிரியர் கல்விப் பாடநெறியினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் நியமிக்கப்படும் பாடசாலைகளின் (அரச ஆசிரியர்கள், அரச பாடசாலைகளில் மற்றும் அரசு அல்லாத ஆசிரியர்கள் உரிய நிருவாக சபையின் கீழ்) தொடர்ச்சியாக 5 வருடங்கள் சேவையாற்றியதாக அரசு அல்லது நிருவாக சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரதி

4.

4.1. ஆசிரியர் கல்லூரிகளின் அதிபர்களினால் எதிர்பார்க்கப்படும் நிலைமைகளுக்கமைய சமூகமளிக்காமை தொடர்பான பொதுவான செயற்பாட்டு முறைகள் ஆசிரியர் கல்லூரியின் ஒழுக்க நெறிமுறைகளுக்கு ஒப்பீடாகாத சந்தர்ப்பங்கள் இருப்பின் மற்றும் கற்றல் தொடர்பில் ஆர்வம் காண்பிக்கத் தவறும் பட்சத்தில் பயிற்சி பெறுவோர் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர். பயிற்சிபெறும் கால எல்லைக்குள் ஆசிரியர் பாடநெறியில் கலந்து கொள்ளல் மற்றும் சமூகமளிப்பு 80% தை விடக் குறைவாக அமையும் பட்சத்தில் ஆசிரியர் கல்லூரி இறுதிப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகைமை அற்றவராகக் கருத்தில் கொள்ளப்படும். இருப்பினும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் விசேட காரணங்களுக்கமைய கல்விச் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**4.2. விடுமுறை :**

நிறுவனப் பயிற்சிக்காக இரண்டு வருடகாலம் முழுமையான சம்பளத்துடன் கற்கை விடுமுறை உரித்தாகின்றது. இக்கற்கை விடுமுறைக் காலத்தைப் பயிற்சிப் பாடநெறியினை தொடர்வதற்காக முழுமையாகப் பயன்படுத்துவது அவசியமாகும். இருப்பினும் ஆசிரியர் பயிற்சியைப் பெறுபவருக்கு அத்தியாவசியம் என அதிபர் திருப்தியடையின் மாத்திரம் ஒரு சில நாட்களுக்கு விடுமுறை பெற முடியும். இதற்காக அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. இவ்வாறு பெற்றுக் கொள்ளும் விடுமுறை ஒரு வருடத்திற்கு 10 நாட்களைத் தாண்டாது இருக்க வேண்டும்.

கூடுதலாக விடுமுறை பெறுவதினால் பாடநெறியின் கற்கைச் செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் திருப்தியற்றது என எவரேனும் பயிலுனர் தொடர்பில் அதிபருக்குத் தகவல் கிடைக்கும் பட்சத்தில் பாடநெறியின் கற்கைச் செயற்பாடுகளை இடைநிறுத்தி மீண்டும் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவர். மருத்துவ விடுமுறைகளுக்காக அரச அல்லது அரசினால் பதிவு செய்யப்பட்ட வைத்திய சபையின் வைத்தியரின் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஆசிரியர் கல்லூரியினால் நடாத்தப்படும் தொடர்ச்சியான மதிப்பீடுகள் மற்றும் இரு வருடகால ஆசிரியர் பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையில் சித்தியடைவோருக்கு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்படும்.

6. சம்பள அளவு

ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்குரியதாக கடந்த கால மறுசீரமைப்புகளுக்குட்பட்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் உரிய சம்பள அளவில் தாபிக்கப்படும்.

7.

7.1. சகல விண்ணப்பதாரர்களும் தாம் நியமனம்பெற்ற பாடங்களில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற வேண்டும். இருப்பினும் விசேட கல்விப் பாடநெறிகளுக்கு மாத்திரம் வேறு பாடங்களின் மூலம் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கும் விண்ணப்பிக்க முடியும். அரசின் நியமனங்களைப் பெற்ற ஆசிரியர்களின் நியமனப் பாடங்கள், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் தாம் க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த பாடங்களில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும். இதற்காக உரிய பாடங்கள் கற்பிக்கப்படுவதாக அங்கீகரிக்கப்பட்ட நேரசூசியின் பிரதி நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். க.பொ.த (சா.த) தகைமைகளுக்கமைய சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனப் பாடம் குறிப்பிடப்படாத வேளையில் இந்நியமனம் ஆரம்ப ஆசிரியர் நியமனமாகக் கருதப்படும். தனியார் மற்றும் பிரிவெனா ஆசிரியர்களின் நியமனக் கடிதங்களில் பாடங்கள் குறிப்பிடப்படாத வேளைகளில் தாம் கற்பிக்கும் பாடங்களுக்கமைய பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும். நிறுவனப் பொறுப்பாளரின் ஒப்பத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நேரசூசியின் பிரதியினைச் சமர்ப்பிப்பது அத்தியாவசியமாகும்.

7.2. பயிற்சி வழங்கப்படும் பாடநெறிகள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

<u>பாடநெறியின் பெயர்</u>

| | |
|---|---|
| சிங்களம் | சித்திரம் |
| ஆரம்பக்கல்வி | சங்கீதம் |
| சமூக விஞ்ஞானம் | நடனம் |
| விஞ்ஞானம் | அரபு |
| கணிதம் | விசேட கல்வி |
| விவசாய விஞ்ஞானம் | கைத்தறி கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம் |
| மனைக் கல்வி | வர்த்தகம் |
| ஆங்கிலம் | தமிழ் |
| பௌத்த சமயம் | உடற்கல்வி |
| கிருஸ்தவ / ரோமன் கத்தோலிக்க சமயம் | இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) |
| இந்து சமயம் | தகவல் தொழில்நுட்பம் |
| இஸ்லாம் | ஆலோசனை |
| நூலக விஞ்ஞானம் | |

tamilguru.lk

8. ஆசிரியர் பயிற்சிக்காக விண்ணப்பித்தல்

8.1. ஆசிரியர் பயிற்சிக்காகக் கற்பித்தல் மேற்கொள்ளப்படும் பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாக அழைப்புக் கடிதங்கள் அனுப்ப வேண்டியதுடன் அதற்கமைய அழைப்புக் கடிதங்கள் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து அமைச்சிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

8.2. சகல பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் பயிற்சி கட்டாயம் என்பதனால் ஆசிரியர் பயிற்சிக்காக ஆசிரியர்களை விடுவிக்க அதிபரினால் கட்டாயமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

8.3. 2.1 – 2.4 இன் கீழ் கிடைக்கும் சகல விண்ணப்பப்படிவங்களும் ஆசிரியர் பயிற்சிக்காகக் கருத்தில் கொள்ளப்படுவதுடன் அமைச்சினால் ஆசிரியர் கல்லூரிகளுக்கு அனுப்பப்படும் பெயர்ப் பட்டியலுக்கமைய ஆசிரியர் கல்லூரிகளிலிருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. ஆசிரியர் கல்லூரிகளில் காணப்படும் இடவசதிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய ஆண்டுக்குச் சேர்த்துக் கொள்ளும் அளவு அமைச்சினால் தீர்மானிக்கப்படும்.

**சுனில் ஹெட்டிஆரச்சி**
செயலாளர்
கல்வி அமைச்சு
இசுருபாய, பத்தரமுல்ல